# ஜீ ஷு ல்

காயம் – 02

ஜனவரி - மார்ச்



வெளியீடு :

மின்னல் வெளியீட்டகம்

ஒலுவில்.

15/-

## அம்மையே உனைக் கொன்ற பழி சுமந்தவர்களாய்....

ஆண்களை மயக்கும் மாய வித்தைகளை
நீ அறிந்திருக்கவில்லை
ஓர விழிப் பார்வைகளோ......
தலை குனியும் தந்திரங்களோ.... உன்னிடமிருக்கவில்லை !
தெளிவும் தீட்சணியமும் உன் பார்வையிலிருந்து
உறுதியும் தைரியமும் உன் நடையிலிருந்தது
அலங்காரமும் ஒப்பனையும் உன்னிடமில்லாதிருந்தது
எளிமையும் பரிசுத்தமும் நிரம்பியதாய் உன் வாழ்க்கையிருந்தது

இளம் பெண்ணாக அப்போது
வயல் வெளிகளில் மந்தைகளோட்டிச் செல்வாய்
அடர்ந்த காடுகளிலும்.....
வெள்ளம் வழிந்தோடிய ஆற்றங்கரைகளிலும்....
விறகு வெட்டித் தலைமேல் சுமந்து திரும்புவாய் !
அப்போதந்தக் காடுகளில் வாழ்ந்த பேய், பிசாசுகள்
தூர இருந்து கனைத்துப் பார்த்துப் பின்
மறைந்து போவதாய் கதைகள் சொல்வாய் !
வீட்டிலும் வெளியிலும் உன் குரலே ஓங்கியொலித்தது !



காலப் பெருஞ் சுழியில் - நீ
திரிந்து வளர்ந்த அடவிகள் யாவும் மெல்ல அழிந்தன
பளிங்கு போல் நீரோடிய அருவிகள் யாவும்
அசுத்தமாகிப் பின் தூர்ந்து போயின
கடந்த காலம் பற்றிய உன் கதைகளிலெல்லாம்
கசப்பான சோகம் படியலாயிற்று !

உன் பொழுதின் பெரும் பகுதி
படுக்கையில் முடங்கிப் போனது !
ஓய்வற்றுத் திரிந்த உனது பாதங்கள்
வேலைகளை எண்ணி
உனது கரங்கள் துடிக்கும் பொழுதுகளில்
இயலாமைகள் கொண்டு புலம்பத் தொடங்குவாய் !

நோய் தீர்க்கவென
சந்தடிகள் நிரம்பிய நகருக்குக் கூட்டி வரப்பட்டாய் !
உன் காற்றும் நீரும் மண்ணும் ஆன்மாவுமிழந்து....
நகரடைந்தாய் நீ மட்டும் !
உணர்வுகள் அடங்கி ஓய்ந்த பின் ஒருநாள்
உறவுகள் கூடி உனைத் தூக்கிச் சென்றனர்....
உனக்கான மண்ணெடுத்த பூமி நோக்கி !
அம்மையே !
இப்போது நாம் வாழ்கிறோம்
எல்லோர் கையிலும் பொம்மைகளாக !

பஹீமா ஜஹான்
14122002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டாள்த்தனத்தால் விட்டுக் கொடுப்பதா ? முன்னெச்சரிக்கையாய் மீட்டெடுப்பதா ?

அபூ ஸஹ்றாத் .....

ஆலிம் சேனைக் கண்ணோட்டம்

காலனித்துவ ஆட்சியில் அடிமைப்பட்டுக்கிடந்த இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த காலம் முதல் பேரினவாதம் சிறுபான்மையினரை நோக்கி தன் ஆதிக்கத்தை செலுத்தத் தொடங்கி விட்டது. மொழிச் சுதந்திரத்தை அரச இயந்திரத்திலிருந்து முற்றாக ஒழித்ததுடன். அதன் இனத்துவேஷக் கோரப் பற்களை நீட்டியே வந்துள்ளது.அந்த வகையில் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியம் சுமந்து நிற்கும் தாயகப் பூமியான வடக்கும் கிழக்கும் திட்டமிட் ட முறையில் கூறுபோட்டுச் சுவீகரித்ததுடன் பெரும்பான்மை சமூகத்தவரை குடியேற்றியும் வந்துள்ளன.

உண்மையில் மணலாறு வெலி ஓயாவாக மாறியதும் லிங்கநகர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக உருவெடுத்ததும் அம்பாரை திகாமடுல்ல மாவட்டமாக புதுப்பிக்கப்பட்ட கையோடு பெரும்பான்மைச் சமூகத்தவரை குடியமர்த்தி ஒரேயொரு முஸ்லிம் மாவட்டத்தின் முதுகெலும்பை உடைத்ததுடன், கல்லோயாத் திட்டத்தின் கீழ் ஹிங்குராணை சீனித் தொழிற்சாலைக்கு கரும்பு செய்வதற்கு என்ற போர்வையில் முஸ்லிம்களின் காணிகள் காலத்துக்குக் காலம் ஆட்சி மாற்றத்திற்கேற்ப சுவீகரித்து பொருளாதாரத்தை நசுக்கி விட்டனர்.

இம்மாவட்டங்களில் ஏழை விவசாயிகளால் காடு வெட்டி பண்படுத்தி பல வருடங்காளாக நெற்செய்கை பண்ணப்பட்டு பரம்பரையாக பராமரிக்கப்பட்டு வந்த காணிகளான அடம்பன் குளம். மறுக்குளம் (வெள்ளக் கல் தோட்டம்). பொன்னன் வெளி எல்லாம் ஏற்கனவே திட்டமிட்ட அடிப்படையில் விழுங்கப்பட்ட போது பேரினவாதிகளுக்கு முட்டுக்கொடுத்திருந்த அரசியல்வாதிகள் உரிமைக் குரல் கொடுப்பதற்குப் பதிலாக தாங்கள் தொடர்ந்தும் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டு சலுகைகளுக்காக நாடகமாடிக் கொண்டிருந்த வேளையில்தான் கிழக்கில் கிழர்ந்தெழுந்த மாபெரும் தலைவரும் கலாநிதியுமான மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் வழிகாட்டலின் கீழ் கிடைக்கவிருந்த ஜெயபூமி உறுதி வழங்கும் திட்டமும் இங்கினியா குளத்திற்குள் துவேஷ விதைகளைத் தூவிக் கொண்டிருக்கும் அமைச்சர் ஒருவரினால் பின்போடப்பட்டதுடன், பொன்னன் வெளிக் காணிக்கு மாற்றீடாக வழங்கவிருந்த பால்கேணிக் காட்டில் எரிந்த இனவாத நெருப்பை அணைக்க அபிவிருத்தி என்ற போர்வையில் குறித்த பிரதேசத்தின் புனித இடத்தில் கோடி ரூபாயைக் கொட்டி அமைதிப்படுத்தியதை இந்த நாடு மறந்திருக்க வாய்ப்பில்லை.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்ட பெரும்பான்மையினர் எல்லைக் கற்களை நாட்டிக் கொண்டதுடன், நச்சுத்தடவிய நாக்கை அண்மைக்காலமாக ஆலிம்சேனை வரை நீட்டுவது வியப்பாக உள்ளதுடன் மக்கள் மத்தியில் விசனமும், சந்தேகமும் ஏற்படும் இந்த வேளையில், முஸ்லிம்களின் விடயத்தில் இனவாதம் பூசி அதிக தொல்லை கொடுத்த முன்னைநாள் அமைச்சர் மீண்டும் பொறுப்பு வாய்ந்த அமைச்சராக பதவியேற்ற தினத்திலிருந்து கெடுபிடி அதிகரித்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தங்களது சொந்தக் காணிகளை மெசின்கள் மூலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பனிடவோ அல்லது அபிவிருத்திப் பணிக்காக கிறவல், களி ஏற்றவோ முடியா அதிகாரிகள் என்ற போர்வையில் தொடரும் இந்தத் துவேஷ மனப்பான்மையால் இனங்களுக்கிடையிலான முறுகல் நிலை ஏற்படும் வாய்புக்கூட இருப்பதைக் காண முடிவதுடன், ஆலிம்சேனை அபாயத்தின் விழிம்பில் இருப்பதை அவதானிக்க முடிகிறது. அண்மையில் ஆலிம் சேனை குடியிருப்பாளர்களைச் சந்தித்த கௌரவ மாண்புமிகு நெடுஞ்சாலைகள் அமைச்சர் அதாஉல்லாஹ் அவர்களிடம் மேற்குறித்த பிரச்சினை முதற்கட்ட நடவடிக்கையாக முன்வைக்கப்படவில்லை. இதற்கு ஆலிம்சேனை நிருவாகம் பல குழுக்களாக பிரிந்து செயல்படுவதே காரணமென குடியிருப்பாளர்கள் கவலை கொண்டுள்ளனர்.

அதேவேளை கடந்த காலங்களில் ஆலிம்சேனையின் அபிவிருத்திப் பணிக்காக ஒதுக்கப்பட்ட நிதி கூட நிருவாகத்தினரின் கயிறிழுப்புக் காரணமாக சில சந்தர்ப்பவாத அரசியல் சக்திகளால் வேறு இடம் நோக்கி நகர்த்திய சம்பவங்களைப் படிப்பினையாகக் கொண்டு எதிர்காலங்களிலும் திட்டமிட்ட அடிப்படையில் பொதுவான கோரிக்கைகளை முன்வைத்து செயற்படுவதன் மூலம் சிதைந்து கிடக்கும் பொருளாதாரத்தை சீர் செய்வதுடன் இழந்த உரிமையையும் தக்க வைத்துக் கொள்ளும் வாய்ப்பும் ஏற்படும் என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. அந்த வகையில் முதல் முயற்சியாக மகிழயடிக் கட்டில் அணைபோடுவதன் மூலம் பல ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதியைப் பெறுவதுடன் நிரந்தரக் குடியிருப்பாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைய வாய்ப்பிருக்கிறது. அல்லது மாலாங்குளத்தை ஊடறுத்து கொக்குப் பீச்சி மூலையில் சங்கமிக்கும் முதிரையடி வட்டை வாய்க்கால் மூலம் நிரந்தரமாக தண்ணி கொண்டு வருவதற்காக, அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து எம்பிக்களுக்கும் கூடுதல் அழுத்தம் கொடுத்து, குறித்த பிரதேச விவசாயிகளும் நிருவாக உறுப்பினர்களும் ஒன்றுபடுவதன் மூலம் சாதகமாக இருக்கும் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதே புத்திசாலித்தனமாக இருக்கும்.

மாறாக தனித்தனியே சுயநல நோக்கில் முன்னெடுக்கப்படும் முதிர்ச்சியில்லாத சிந்தனைகளும் தூரநோக்குகள் தொலைந்து போகும் வேலைத் திட்டங்களாலும் கடந்த காலங்களில் பேரினவாதம் அரங்கேற்றிய உச்சக்கட்ட நடவடிக்கையான பதினாறு பேரை படுகொலை செய்ததன் மூலம் சிறுபான்மையினரின் இருப்புக்களுக்கு வலை விரிக்கும் சதித்திட்டத்தில் படிப்பினை பெறாமல் இன்னும் தலைமைத்துவ போட்டியால் நீண்ட தூரப் பயணத்தின் இலக்குத் தவறும் போது வழிகாட்டலின்றி எதிர்கால சந்ததியினரை அடிமைக் கோலத்திற்கு இட்டுச் சென்ற மாபெரும் தவறைச் செய்த வரலாற்றுப் பழியை இந்த நூற்றாண்டு பதிந்து வைக்க வேண்டி ஒரு துர்ப்பாக்கிய நிலை தவிர்க்க முடியாமல் போகும்.

***கீறலின் காயம் 03 க்காக....***

**கீறலின் காயம் 03க்காக பாதுகாக்கப்படும் படைப்புகளுள் இவர்களுடைதும்.**
**மருதமுனை விஜிபி. கவிஞர் ஏ இக்பால். கவிஞர் அன்புடீன். கவிஞர் எம் .ஏ. நுஃமான் . எம்.எச்.எம் ஷம்ஸ். உக்குவளை ஷம்ஸியா இஸ்மாயில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்கும் ...

-எம்.எச்.எம்.ஷம்ஸ்-



வடக்குத் தென்றலில்
மணப்பது தமிழ்
தெற்குத் தென்றலில்
மணப்பது சிங்களம்

சிங்களமும் தமிழும்
கலக்கின்ற தென்றலிலே
பிணவாடை சேர்க்கும்
தாய்மாரின் பெருமூச்சு
அங்கும் எழும்
இங்கும் எழும்

சாவா வாழ்வா என்று
சறுக்கும் வீதி நாலில்
இரத்த அபிஷேகப்
பெரு வேள்வியில்
வயிற்று ஜீவனுக்காய்
பலிப் பொருளாக
தன்னையே அர்ப்பணிக்கும்
தாய்மையின் தவிப்பு
அங்கும் கேட்கும்
இங்கும் கேட்கும்

அங்க அழகோடு
ஆராரோ பாடி
பெற்றெடுத்த குழந்தை
பெரியவனான பின்
ஆறாம் விரலாய்
ஆயுதம் சுமந்ததால்
காலிழந்து நொண்டியாய்
கரை சேரும் காட்சி கண்டு
கதறி ஓலமிட்டு
கண்ணீர் குவித்திடுவாள்
அந்தக் கண்ணீர்
அங்கும் சுடும்
இங்கும் சுடும்

நாடு காப்பதற்காய்
நெஞ்சில் நெருப்பேற்றி
சூடு தணிய முன்பு
துப்பாக்கிச் சனியனுக்கு
அறிவை அடகு வைத்து
அரிதான யௌவனத்தை
பலிப் பொருளாக்கி விடும்
வைத்தியச் செயல்
அங்கும் நடக்கும்
இங்கும் நடக்கும்

அறிவுப் பொக்கிஷமும்
ஆணழகுத் திருவுருவும்
திமிறுகின்ற யௌவனமும்
தெவிட்டாக் கனவுகளும்
நீரின் குமிழாய்
நிமிஷக் கரைசலாய்
ஆவி கலந்த பின்
அந்தப் பொற்கூடு
புதைந்து மக்குவது
அங்கும் மண்ணில்தான்
இங்கும் மண்ணில்தான்

காட்டேரியை குண்டில் அடைத்து
உலகெலாம் வலை விரித்து
உயிருக்குப் பேரம் பேசும்
உன் மத்தர்கள்
மேலைத் திக்குகளில்
மண்டை ஓடுகளால்
மாளிகை எழுப்புகிறார்
அந்த -
மரணத் தூதர்களின்
வேட்டைக் காடாய்
அங்கும் அவலம்
இங்கும் அவலம்

மூளையற்ற குண்டுகளை
ஏவுகின்ற மூடர்கள்
அப்பாவி மூளைகளால்
ஆம்லெட் செய்து
பூமிக்கு விருந்து வைக்கும்
புத்துலக வித்தைகளால்
அங்கும் ஒப்பாரி
இங்கும் ஒப்பாரி

இந்த அவலங்கள்
இனியும் தேவையா ?

பால் சுமந்த மார்வெடிக்க
தாலி அறுத்த தாரம் துடிக்க
பிஞ்சுச் சேய்கள் பேச்சிழக்க
இந்த அவலங்கள்
இனியும் தேவையா ?

ஊமையாய் நொண்டிகளாய்
உடல் ஊனச் சொத்திகளாய்
நடைப் பிணங்கள்
நடமாடும்
மயான தேசம்தான்
எங்கள் தலைமுறையின்
கனவுலக ராஜ்யமா ?

மானுடப் பண்புகளும்
பிறப்போடு நாம் கொணர்ந்த
உரிமைகளும் பஸ்பமாய் போன
பாலைப் பாழ்வெளிதான்
எங்கள் தலைமுறையின்
கனவுலக ராஜ்யமா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசப்பற்று

- சொல்லன்பன் நஸீறுதீன் -

சிறு கதை

பறவைகளும் மிருகங்களும் பாதி வயிற்றை நிரப்பிக் கொண்ட காலை பதினொரு மணி. தேர்தல் காலத்து போஸ்ரர்களால் அலங்காரிக்கும் சாயம் போன ஒற்றை கட்டிடத்தைச் சுற்றி கால் நடைகளின் கழிவறை ஒட்டிய டெங்கு ஒழிப்பு பதாதையில் அப்பிய நுளம்புக் கூட்டம் போல் கட்டிடம் பிதுங்கிய நோயாளர்களின் செத்த பார்வைகள் மொத்தமாக குவிந்து இருக்கும் சேறு நிறைந்த பாதையை சாறு பிளிந்து வந்து கொண்டிருந்த கார் அந்த அரசாங்க ஆஸ்பத்திரியை நோக்கித் திரும்பியது.

சூரியனை உள்வாங்கிய வர்ண மினுமினுப்பு டொயோடா கார் லாவகமாக அண்மித்து நுழைந்து அமைதி கொண்டது. ஏற்கனவே கொடுக்கப்பட்ட இலக்கப் பிரகாரம் எறும்புப் பாதையாய் போவதும் வருவதுமாக நோயாளர்கள் முக்கியும் முனகியும் மருந்துத் துண்டுடன் குளிசை எடுத்துக் கொண்டிருந்தனர். வெவ்வேறு வகையான நோய்களுக்கு ஒரே வகையான குளிசைகள் வெறுங்கையில் திணிக்கப்பட்டதுடன் மிகுதிக் குளிசைகளை கடையில் வாங்கிக் கொள்ளுமாறும் கட்டளையும் பிறப்பிக்கப்பட்டது.

ஐம்பதாம் இலக்கத்துண்டு பையில் அடிவயிற்றில் கையுமாக நான் அவஸ்தையில் இருக்கும் போது, கடிகாரம் பனிரெண்டில் சத்தம் போடத் தொடங்கியதும் விரிந்த கதவு வழியே கையில் டெஸ்க் கோப்புடன் காணாமல் போனார் டாக்டர் செயின்.

தளர்ந்த வயது காளைகளும், குழந்தைகளை சுமந்து நிற்கும் ஏழைகளும் எதிர்பார்ப்பில் இடி விழுந்ததை நினைத்து கலங்கி, பின் தெளிந்து, கொக்கின் சீருடையில் நன்றி உள்ள மிருகத்தின் இதயம் சுமக்கும் கெடுபிடிகளிடம் துப்புத் துலக்க முற்பட்டவர்களிடம், இஞ்சப் பாருங்க எல்லாரும் கேட்டுக்கங்க, பனிரொண்டு மணியோட டியுட்டி முடிஞ்சி, ஐயா மூணாவது வீட்டில காசி மருந்து குடுக்கார். விரும்பினா போங்க. இல்லாட்டி நாளைக்கி வாங்க, என்ற எடுபிடி ஒற்றைச் சன்னலையும் இரட்டைக் கதவையும் மூடத்தொடங்கினார்(கள்). வேதனையும் சோதனையும் சுமந்து ஏழை நோயாளிகள் நிலத்தில் கொட்டிய நெல்லிக்காய் மூடையாய் நெளிந்து சென்றனர். இதே மக்களின் வரிப்பணத்தில் அரசாங்கம் சீருடையும் சீர்கல்வியும் இலவசமாக வழங்குவதுடன், ஆசிரியர் சம்பளமும் கொடுத்து ஏ. எல் வரை நெறிப்படுத்தி, மீண்டும் மேல் படிப்பை மஹாப் பொல உதவியுடன் ஆறு வருடங்களுக்கு அனைத்து வசதிகளுடனும் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டு சம்பளத்துடன் பயிற்சியும் பட்டமும் வாங்குவதுடன், தொழில் தொடங்கியவுடனே பங்களா வீடும் வங்காள விரிகுடாவை ஒத்த காணியும், தானே தொகை போட்டுக் கொள்ள கையொப்பமிட்ட காசோலையும் வாகனமும் வாங்கிய சீதனம் போதாதென்று, சம்பள உயர்வு கோரி ஏழை நோயாளிகளின் உயிரைப் பணயம் வைத்து விளையாடுவதுடன், வீட்டிலும் டியூட்டி நேரத்திலும் பிரத்தியோக வைத்தியம் செய்வதால் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் மருந்து வகைகள் மாயமாய் மறைவது தொடர்கதையாகி விட்டதை மனதில் அசைபோட்டுக் கொண்ட நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிற்றில் கோளாறு தாங்க முடியாமல் காசி மருந்து எடுக்கும் நோக்கத்துடன் குறித்த மூன்றாவது வீட்டை நோக்கி நகர்ந்தேன். என் போன்ற கடுமையான நோயாளர்கள் சிலர் வெளி வராண்டாவில் போடப்பட்ட சோபாக்களில் அமர்ந்திருந்தவர்களோடு நானும் இணைந்து கொண்டதும், உள்ளே ஒரு வயதான நோயாளியிடம் நோய் விசாரிக்கும் அணுகுமுறையில் பாதி நோய் குறைந்திருப்பது அவளின் பதிலில் இருந்து உணர முடிந்தது. இதே டாக்டர் அரசாங்க ஆஸ்பத்திரியில் முகத்தைத் திருப்பிக் கொண்டு நோய் விசாரிக்கும் அதட்டலில் இதயங்கள் இடம் மாறிய சம்பவங்களை நினைக்கும் போது, இலட்சியங்களுக்காக வாழாமல், லெட்சங்களுக்காகவே வாழ்க்கையை அமைத்து நோக்கத்தை தவற விடுகின்றனர். என்வெலப்புக்குள் குளிசைகளை எடுத்துக்கொண்டு போவதும் வருவதுமாக இருந்தனர். நேரம் ஒரு மணியைத் தாண்டிக் கொண்டிருந்தது. உள்ளே பெல் அடிக்கும் சத்தம் கேட்டு எனது முறையில் சென்றேன். எக்ஸ்கியூஸ்மி சார். குளு குளு அறையில் கொழு கொழுவென இருந்த டாக்டர் எனது குரல் கேட்டு நிமிர்ந்ததும், மேஅய்கம் இன்சார், அனுமதி கேட்டேன். அப்கோஸ் ப்ளீஸ் சிட்டவுன் அமரச் செய்த என்னிடம், டேய் நீ....நீ... சுலைமான் தானே! ஓ.....மை கோட் என்னடா இப்படி இளைச்சிட்டே உன்னைக் கண்டு எத்தனை வருசமாச்சி, என்றவர் கட்டிலில் படுக்கவைத்து வயிற்றில் கைபதித்து அமர்த்தி மூச்சை உள்வாங்க கட்டளை பிறப்பித்த டாக்டர் செயின், சுலைமானோடு பாலர் வகுப்பிலே ஒன்றாகப் படிக்க ஆரம்பித்ததிலிருந்து பரிச்சயமான போதிலும், சுலைமான் வகுப்பிலே கெட்டிக்காரன் அவனிடம் கேட்டுப் படிக்காத மாணவனே அந்தப் பாடசாலையில் கிடையாது. அதனால் தான் என்னவோ வறுமை அவனிடம் வசதியாக வாழ்ந்தது.

கிராமத்து பெரும் புள்ளியின் மகனாக செயின் இருந்த போதும், அனேகமாக சுலைமானிடமே படிப்பு விடயத்தில் கேட்டுத்தெரிந்து கொள்வான். பல்கலைக்கழகத்தில் இருபேருக்கும் இடம் கிடைத்த போது, அநியாயத்தையும் எதிர்த்து நிற்பவன். மாணவ தலைவர் தெரிவுப் போட்டியில் எதிர்த்து நின்று காரசாரமான பிரசாரம் செய்தமைக்காகவும், குடும்பங்களில் உள்ள மாணவர்களைப் பார்த்து தங்கப்பதக்கம் வாங்கிக் கொடுக்க முயற்சி செய்யும் அநியாயக்காரர்களை எதிர்த்தமைக்காகவும், சுலைமானின் இறுதி ஆண்டுப் பரீட்சைத் தாள்களையும் காணாமல் செய்து விட்டு, எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி வாழ்க்கையை அஸ்தமிக்கச் செய்த கல்விமான்களின் பகையுணர்வு, பழிதீர்த்துக் கொண்ட சம்பவத்தை நினைக்கும் போதெல்லாம் கண்ணீர் வர ஆரம்பித்து விடும்.

"டேய் சுலைமான் என்னடா அழுகுற வயிற்ற பலமா நசித்துப் போட்டடேனா? வெரி சாரி பயப்படாத ஒரு இன்ஜெக்ஷன் போட்டால் எல்லாம் சரியாகி விடும். என்றவர் சில குளிசைகளை பல என்வெலப்புக்குள் போட்டு தந்து விட்டு ஊசி மருந்துக்கும் குளிசைக்குமாக நூற்றி இருபது ருபாவை வாங்கிக் கொண்ட நண்பர் டாக்டர் செயின், மேசையிலிருந்த பெல்லை அழுத்தினார். அந்த பெல் அடுத்த நோயாளரை உள்ளே அழைப்பதற்கா? அல்லது உள்ளே இருக்கும் என்னை வெளியே அனுப்புவதற்கா? என்று புரியாமல் நண்பர் டாக்டரைப் பார்த்தேன்.

அவர் என்னைத் தொட்டு சோதனை செய்த கரங்களை சோப்புப் போட்டு கழுவ வோஸ்பேசினை நோக்கி நடந்து கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றின் விலங்கு

-ஓட்டமாவடி - அறபாத்-

எனக்குள் கவிழ்கிறது
இருள்
பொன்னி வண்டு முட்டையுள்
மூர்ச்சித்துக்கிடப்பதான வலி.

மரவட்டையைப் போல்
எனது தேசம்
மிகச் சுருங்கிற்று.

காலாறு நடக்கையில்
ஒரு முரட்டுக்குரல்
என் கனவைக்குதறிப்போடும்.

அதிர்ஷ்டலாபச்சீட்டில்
மறைந்திருக்கும்
வெற்றி எண்களைப்போல்
வாழ்க்கை,
எப்போதாகிலும்
ஒரு ஓரத்தில் துளிர்த்து
பின் மறைகிறது.

சொல்வதற்கும், எழுதுவதற்கும்
இங்கு ஏதுமற்ற அந்தரம்.

மரணத்தின் இடைவிடாத
உக்கிரப்பார்வை
"விடுதலை"களின் பெயர் கூவி
தினம் எமை அழைக்கிறது.

சுவாசிப்பதற்கான காற்று மட்டுமே
என் தேசத்தில்
சுதந்திரமாக தெரிகிறது எனக்கு.

அதுவும் நீ வரமாட்டாய் என
நிச்சயித்து நான் தூங்கும்
பகலில் மட்டும்.

25 - 09 - 2001

## மறந்து போன கவிதை



- அபூ ஸர்பான் -

என் கவிதையின் பொருள்
நீ புரிந்து கொள்ளாமல்
இருக்கப் போவதில்லை

என்
அழுகையின் அர்த்தமும்
நீ அறியாமலில்லை

என் மனக்கண் திறந்து
கண்ணீர் மல்சி
ஒவ்வொரு நிமிடமும்
உன்னை அடைய நினைப்பதுவும்
உனக்குப் புரியாமலில்லை

உன்னை நோக்கியதான
என்
ஒவ்வொரு நெருங்குதலும்
புரிந்தும்
உன் கடாட்சம்
என்னில் விழாதிருப்பது
வினோதம்தான்....

நாளைய
என் பயணத்தில்
எவருக்குமானதான
காத்திருப்புக்களில்லை
உன் சன்னிதியிலேயே
என் ஆத்ம சயனம்
நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதால்

அது
உனக்கும் எனக்குமுள்ள
தூரம்
நீண்டதாய் இருந்தாலும் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டுகோள் – 01

ஒலுவில் அல் ஹம்றா மஹா வித்தியாலயத்தில் தற்போது ஆண்டு -03, ஆண்டு -04 ஆகிய ஆண்டுகளில் கல்வி கற்கும் பிள்ளைகள் அனைத்தும் தளபாட வசதியின்றி வெறும் தரையில் அமர்ந்து தங்களது கல்வியினைத் தொடர வேண்டிய பரிதாபகரமான நிலை கவலைக்கிடமாக உள்ளது. எங்களிலே இவ்வாறு ஒரு வகுப்புக்கு நிலவிய இவ்வாறான கதிரைத் தட்டுப்பாட்டினை அறிந்து ஒரு தனவந்தர் அவ்வகுப்புக்கு தேவையான இறப்பர் கதிரைகளை வாங்கி அன்பளிப்புச் செய்துள்ளார். எனவே பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட அனைவரிடமும் அல்ஹம்றா சார்பில் "கீறல்" இவ்வேண்டுகோளினை விடுக்கின்றது. "இந்த இரண்டு வகுப்புக்களிலும் சுமார் 262 மாணவர்கள் வரை உள்ளனர். ஒரு சிறிய இறப்பர் கதிரையின் விலை 100 - 150 ரூபாவரைக்குள்ளேயே உள்ளது. எனவே விரும்பியவர்கள் தங்களால் முடிந்த அளவு உதவியினை இதற்காக செய்ய முன்வரும் போது இப்பிரச்சினையினை முற்றாக தீர்க்கக் கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். எனவே உங்களில் யார் யார் முன்வருகிறீர்கள்.....?

## புதிய குழுவுக்கு வாழ்த்துக்கள்

ஒலுவில் 02ம் பிரிவில் இயங்கிவந்த பாலர் பாடசாலை சில தவிர்க்க முடியாத காரணங்களினால் அதன் இயக்கத்தில் ஒரு மந்தகரமான நிலையினை அடைந்திருந்தது. பாலர் கல்வியின் இம் இம்மந்தகரமான நிலையினைக் கருத்தில் கொண்டு சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுவின் ஒலுவில் 02ம் பிரிவுக்கான தலைவர் யூ.கே. அப்துர்றகுமான் அவர்களின் வழிகாட்டல் ஆலோசனையின் கீழ் இதனைச் சீர்செய்ய புதிய குழுவொன்று 2004.04.06ம் திகதி அமைக்கப்பட்டு பாலர் பாடசாலை அபிவிருத்தியினை இக்குழு துரிதமாக மேற்கொண்டு வருகின்ற இவ்விடயம் பாராட்டுக்குரியது. இக்குழுவின் தலைவராக எஸ். எம். உபைதீன் அவர்களும் செயலாளராக எம். ஐ. ஏ. லத்தீப் அவர்களும், பொருளாளராக யூ. ஐயூப் அவர்களும் உப தலைவராக எஸ். எல். அகமட், உப செயலாளராக ஏ. எல். உவைஸ் அவர்களும் இவர்களோடு ஏனைய நிர்வாக செயற்குழு உறுப்பினர்களாக 9 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இக்குழு இத்தோடு மாத்திரம் நின்று விடாமல் தொடர்ச்சியாக பல சமூகசேவை முயற்சிகளிலும் ஈடுபட்டு வர வேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

## மாயாஜால வித்தைக் கண்காட்சி

எதிர் வரும் ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு அன்றைய தினம் எமது வெளியீட்டகம் மாபெரும் மயிர்க் கூச் செறியும் மாயாஜால வித்தைக் கண்காட்சி ஒன்றினை நடாத்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது. காட்சிகள் பற்றிய விபரம் இதோ

காட்சி :1 ஹஜ்ஜுப் பெருநாள் தினம் 3.00 - 6.00 மணிவரை (பாடசாலை மாணவர்களுக்கு மட்டும்)

காட்சி : 2 ஹஜ்ஜுப் பெருநாள் மாலை 6.00 - 9.00 மணிவரை (பொது மக்கள் அனைவருக்கும்)

காட்சி : 3 இரவு 9.00 - 12.00வரை (பொது மக்கள் அனைவருக்கும்)

டிக்கட்டுக்கள் :
100/= 50/= 30/= 20/=

ஒலுவிலில் டிக்கட்டுக்கள் கிடைக்குமிடங்கள் :
IPM சலூன் (கொமியுனிகேசன்),
சொல்லன்பன் றஸீருதீனின் ரேடர்ஸ்,
டிஸ்கவறி மல்டி கோனர்,
மற்றும் எமது நிர்வாக உறுப்பினர்களிடமும்.

# வேண்டுகோள் - 02

தற்போது ஒலுவில் பொது நூலகத்தில் நிலவும் நூல்கள் பற்றாக்குறையினையிட்டு நூலாசிரியர்கள், நூல்கள் பதிப்பக வெளியீட்டகத்தவர்கள், இலக்கியவாதிகள், பொதுநலன் விரும்பிகள் அனைவரிடமிருந்தும் ஒலுவில் பொது நூலகம் உதவியினை எதிர்பார்க்கின்றது. ஒரு சமுதாயத்தின் அறிவு வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் வழிகோலும் இந்நூலகத்தின் வளர்ச்சிக்கு நூல்களையோ அல்லது நூல்களைக் கொள்வனவு செய்வதற்கான பண உதவியினையோ அன்பளிப்புச் செய்ய விரும்புகின்றவர்கள் எமது கீறலோடு தொடர்பு கொண்டு அவற்றினை இந்நூலகத்துக்கு வழங்கி வைக்குமாறு வினயமாய் வேண்டிக் கொள்கிறோம் அவ்வாறு ஒரு நூலையேனும் வழங்கி வைத்தவர்களின் பெயர் விபரம் கீறலில் பிரசுரிக்கப்படும்

இந்த 02 வேண்டுகோளினையும் பின்வரும் ஹதீஸின் அடிப்படையிலேயே கீறல் முன்வைக்கிறது.

"கற்பவனாய் இரு அல்லது கற்றுக் கொடுப்பவனாய் இரு அல்லது கல்விக்கு உதவி செய்பவனாய் இரு நான்காம் நபராய் இராதே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நோக்கு அபிவிருத்திப் பாதை......

பொதுவாக சமூக சேவை என்னும் போது ஒரு சமூகத்தின் எழுச்சிக்காகவும், அபிவிருத்திக்காகவும் மக்களால் மக்களுக்கு செய்யப்படுவதும், மக்கள் பிரதி நிதிகளால் செய்யப்படுவதுமாக இருந்து வருவது நாமறிந்ததே. இன்று நாடளாவிய ரீதியில் பல்வேறு துறைகளிலும், பல்வேறு சமூக சேவைகள் அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதைக் காணும் போது உண்மையில் மன நிறைவொன்று ஏற்படுவதை மறைக்க முடியவில்லைதான். அரசியல் பேதங்கள் பிரிவுகள் குழுக்களின் பக்கச் சார்பு என்ற பாகுபாட்டுப் பிரிவுக் கோட்டினை நீக்கிவிட்டு எமது தேசம், எமதுமண், எமது சகோதரர்கள், எமது எதிர்காலம் என்ற நடுநிலை வாதக்கொள்கைக் கோடுகளில் நின்று நோக்கும் போது சில உண்மைகள் தெளிவு படுவதை நாமும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எமது மண்ணைப் பொறுத்தவரை அன்றுதொட்டு இன்றுவரை, உள்ளூரவர்களும் சரி, வெளியூரவர்களும் சரி பல கொந்தராத்து வேலைகளை எடுத்துச் செய்திருப்பதை நாமறிவோம். பொதுவாக மக்கள் மத்தியிலான பரவலான அபிப்பிராயம் என்னவென்றால் கொந்தராத்து என்றால் உட்பொருள் திருடுதல் என்பதாகும். 100 வீதமான ஒரு கொந்தராத்து வேலை என்றால் 25 வீதம் வேலைகளுக்காகவும் 75 வீதம் கொந்தராத்தாளர்களுக்குமானது என்ற வரைவிலக்கணத்தை மீறியும் சில சிறந்த சேவை மனப்பான்மை கொண்ட கொந்தராத்துக்களும் தற்போது இடம் பெற்று வருவதைக் காணும் போது அதனை எம்மால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

ஒலுவிலின் மிகமுக்கியமான பொதுத் தேவைகளுள் ஒன்றாக இருந்துவந்த மையவாடியைச் சுற்றியான சுற்றுமதிலின் தற்போது நிறைவு பெற்றுள்ள நிர்மானப்பணியினை நோக்கும் போது இந்த உண்மை தெளிவாகிறது. சீனப் பெருஞ்சுவர் கட்டியதை விட இதனைக் கட்டியது ஒரு சாதனை எனலாம் போலுள்ளது. ஒலுவிலின் அபிவிருத்திப் பாதையில் இது ஒரு மயிற்கல்லாய்ப் போனசுவடு எனலாம். 1970க்கு பிற்பட்ட காலம் தொடங்கி இம்மதிலை பூரணமாக கட்டிமுடித்துவிட வேண்டுமென்று பல சமூக சேவை இயக்கங்கள் கங்கணம் கட்டிக் கொண்டபோதிலும் அது முடியாமலேயே போனது. ஆனால் அண்மையில் இம்முயற்சி முன்னெடுக்கப்பட்டு அதனை எல்லோரும் திருப்தியுறும் வகையில் செய்து முடித்திருப்பது உண்மையில் நாங்கள் மனந்திறந்து பாராட்டக் கூடிய ஒருவிடயமாகும்.

மாமனிதர் எமது மகத்தான தலைவர் மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் பாரிய வரலாற்றுக் காலப்பகுதியில் கூட யாரும் கவனியாமல் விட்ட இவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செய்யும் நமது சகோதரர்கள் இத்தோடு நின்று விடாமல் இன்னும் பல அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் முயற்சிகளையும் காணக் கிடைப்பது மகிழ்ச்சிக்குரியதே. குறிப்பிட்டுச் சொல்வதானால் ஒலுவிலில் இருந்து வடக்கு நோக்கிச் செல்லும் 3300 அடி நீளமான தென்கிழக்கு பல்கலைக்கழக வீதி அமைப்பும் அபிவிருத்தியும், திறந்ததிலிருந்தே குண்டுவெடிப்பின் காரணமாக இயங்காமலிருந்த மகப்பேற்று மருத்துவ மனைப் புனரமைப்பு, சில உள்ளூர் வீதிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியோடு ஸஹ்வா மதரஸாவுக்கான வீதி அபிவிருத்தி வடிகான் அமைப்பு நடவடிக்கைகளுக்கான முன்னோடி முயற்சிகள் இவற்றோடு மிக முக்கியமாக ஒலுவில் கிழக்கு - அல் ஜாயிஸா வித்தியாலயத்தினை பெண்கள் கல்லூரியாக மாற்றி அமைப்பதற்கான பல முன்னெடுப்புக்கள் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

உண்மையில் இவ்வாறான பொது அபிவிருத்தி முயற்சிகளை யார் எடுத்துச் செய்கிறார் என்பது முக்கியமல்ல. செய்யப்படும் வேலை மிகமுக்கியமானதாக இருப்பதை நாம் மறுக்கக் கூடாது. அரசியல் பிரிவுகள், தனிப்பட்ட பகைகளால் நமது மண்ணின் அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும் நாம் ஒரு தடைக்கல்லாக இருந்து விடக்கூடாது. நம்மாலும் முடியுமானால் அம்முயற்சிக்கு என்ன ஒத்துழைப்பு வழங்கலாம் என்பதைச் சிந்திக்க வேண்டும். அதைவிடுத்து தங்கள் தங்களது சுய லாபங்களுக்காக "பிட்டிசன்"செய்தல் என்பதுவும் அதனை எதிர்த்துக் குரல் கொடுத்தல் என்பனவும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய சமூக விரோதச் செயல்களாகும். எனவே நல்ல சிந்தனைகளை வளர்த்து நல்ல விடயங்களைச் செய்வதில் போட்டி போடுவோம். அந்த ஆரோக்கியமான போட்டிகளால் சமூகம் வளர்ச்சி பெறும் அதே வேளை நமது மண்ணும் எழுச்சி பெறும்.




## கரையைத் தொடாத அலைகள்

அகிலரூபன் - (நூல் விமர்சனம்)

இன்றைய சூழலில் நாவல் இலக்கியத்தின் வளர்ச்சிப்படிகளை நோக்கும் போது, அது மந்தகரமானதாகவே இருந்து வருவதனைக் காணலாம். ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியத்தின் முதல் முகிழ்ப்பு 1885ல் சித்திலெவ்வையின் 'ஹசன்பே யுடைய கதை'யில் ஆரம்பித்து இற்றைக்கு சுமார் 117 ஆண்டுகளை எட்டியிருக்கின்றது. காலத்தின் குரல்களை வர்க்கியம், சாதியம், இனத்துவம், சீதனக் கொடுமை, பெண்ணடிமைத் தனம், பாலியற் பிரச்சினைகள், காதலியம் எனப் பல்வேறு கோணங்களிலும் எதிரொலித்துக் கொண்டு அவை ஒவ்வொன்றும் அவ்வப்போதுகளில் மட்டுமல்லாது இன்றளவிலும் பேசப்படக் கூடியதாகவே இருந்து வருகிறது.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்நாவலிலக்கயத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியவர் என்றால் அது அ. ஸ. அப்துல் ஸமதையே சாரும். மறைந்த இம்மாபெரும் இலக்கியவாதி மூன்று சிறந்த நாவல்களை எழுதியுள்ளார். அந்த வகையில் தனது 02வது நாவலினை எழுதியிருக்கும் கவிஞர் ஒலுவில் அமுதன் அவர்களின் முயற்சி உண்மையில் பாராட்டுக்குரியது.

படைப்பிலக்கிய வெளியீட்டில் அதி தீவிர ஆர்வம் கொண்ட ஒலுவில் அமுதன் அவர்களது 06வது நூலாக அமையப் பெற்ற "கரையைத் தொடாத அலைகள்" எனும் இந்நாவல் சமகால யுத்த சூழலினைப் பிரதிபலித்துப் பேசும் ஒரு சிறந்த நாவலாகும். யுத்த தர்மங்களை மீறிய கோரசெயல்கள் பலவற்றை அக்கினிச் சொற்கள் கொண்டு மனதில் சூடு போடுகிறார் அமுதன். இதுவரை யாரும் சொல்லத் துணியாத பல கசப்பான உண்மைகளை நாவலில் துணிந்து சொல்லியிருக்கும் ஆசிரியரின் தைரியம் பலமானதே. நிறைவான பல விடயங்களை உள்ளடக்கியிருக்கும் இந்நாவலில் சில சுட்டிக் காட்டப்பட வேண்டிய குறைபாடுகளும் காணக் கிடைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்பின்மைக்காய்ப் பேசிக் கொள்வதாகக் காட்டிக் கொண்டாலும், சில தனிப்பட்ட குழுக்களைச் சாடி நிற்கிறது நாவல். 'யுத்தம்' என்ற ஒரு கருப்பொருளை மாத்திரம் வைத்து நாவலின் சகல பாத்திரங்களை நகர்த்தியிருப்பது சலிப்புத் தட்டவைக்கும் ஒரு பொருத்தமின்மை எனலாம். அத்தோடு நாவலிற்கேயுரிய இயல்பான ஓட்டமின்மை, கதைதொடராக ஒரு கோர்வையாக கோர்க்கப்படாமை, நாவலின் ஒவ்வொரு பாகமும் ஒரேவிடயத்தை வெவ்வேறு கோணங்களில் வலிந்து புனைந்த பாத்திரங்களின் ஊடாக திரும்பத் திரும்பக் கூறல் போன்றனவும் நாவலில் திருப்தியின்மையை ஏற்படுத்துகின்றது, யுத்த அழுத்தங்களை விபரிக்க வரும் ஆசிரியர் அடிக்கடி எதார்த்தவாத விபரிப்புக்களை விட்டு நழுவி தேவையற்ற விடயங்களோடு தூரச் செல்வது நாவலின் சுவையைக் கெடுக்கிறது,

முக்கியமாக கதாபத்திரங்களினூடாகப் பிரச்சாரப்பாணியில் ஆசிரியர் நீதி போதிப்பதைத் தவிர்த்திருக்கலாம். நாவலில் காவிய மரபான நாயகன், நாயகி அல்லது தலைவன், தலைவி என்னும் பிரதான பாத்திரங்களாக எதனைக் கொள்வது என்பது இறுதி வரை குழப்பமானதாகவேயுள்ளது. சிறு கதைச் சம்பவங்கள் வலிந்து நாவலாக்கப்பட்டதா என்ற கேள்வியும் எழுகிறது.

அநேக இடங்களில் கதாபாத்திரங்களின் அதிர்ச்சியான, அவலமான துக்ககரமான நிகழ்வுகளில் கதாபாத்திரங்கள் தேவையற்ற விடயங்களைப் பிரச்சாரம் செய்து அழுவது நம்பவே முடியாத மிகைப்படுத்தலாக உள்ளது. இடையில் தேவையற்ற அரசியல் பிரச்சாரத்தையும் தவிர்த்திருக்கலாம்.

எந்தவொரு துறையிலென்றாலும் சரி எழுத ஆரம்பிக்கும் போது அதுபற்றிய கூடியளவான தேடலின் பின் அத்துறையில் கால் நுழைப்பதே பொருத்தமானதாகும். ஆனால் ஆசிரியர் அம்முயற்சியில் ஈடுபடவில்லையென்பதை நாவல் தெளிவு படுத்துகிறது.

பொதுவாக முஸ்லிம்கள் தமது தாயை ஒருபோதும் தெய்வத்துக்கு ஒப்பிடமாட்டார்கள். அப்படிச் செய்வது அவர்களின் மார்க்கப்படி 'சிர்க்' எனும் இணைவைத்தலுக்குரிய பண்பாகச் சொல்லப்படுகிறது. ஆனால் 'அன்னை தெய்வத்துக்கு' என்று ஆசிரியர் சமர்ப்பணம் செய்திருப்பது ஆச்சரியமாகவுள்ளது. அதே வேளை 'உயிர்க்கொலையை அல்லாஹ் மன்னிக்கமாட்டான்' என்ற ஹதீஸ் இருப்பதாக கதாபாத்திரம் ஒன்றினூடாக ஆசிரியர் கூறியிருப்பதையும் சில முஸ்லிம் ரசிகர்கள் கண்டிப்பதையும் காணக்கிடைக்கிறது. ஏனெனில் இறைவன் நாடினால் நூறு கொலை செய்தவனுக்கும் மன்னிப்பு வழங்குவான் என்ற ஹதீஸினை அவர்கள் இதற்கு ஆதாரப்படுத்துகின்றனர்.

மேலும் ஒரு இடத்தில் அமெரிக்கத் தாக்குதல்களை முஸ்லிம் தீவிரவாதிகளேதான் செய்தார்கள் என்று ஆசிரியர் அடித்துக் கூறியிருப்பதும் ஆச்சரியமாகவுள்ளது. முஸ்லிம் தீவிரவாதிகள் செய்தார்களா?, இஸ்ரேலிய யூதர்கள் செய்தார்களா? என்ற உலகத்தின் வினாவுக்கே இதுவரை விடை கிடைக்கவில்லை.

யதார்த்தத்தை மீறிய செயற்கைத் தன்மையைத் தவிர்த்து, நாவலிற்குரிய கதை சொல்லும் பாணியில் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தியிருந்தால் நாவல் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும். "சிந்திப்பீர்களா.....?" என்ற இறுதியான ஆசிரியரின் அட்வைஸ் தேவையற்றது. இதுவரை ஆசிரியரின் எந்தவொரு நாவுக்கும் அட்டைப்படம் அழகாக அமையவில்லை என்பது பலரது பரவலான கருத்தினையும் ஆசிரியர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

"நாவலில் கதையுடன் நேரடித் தொடர்பில்லாத விடயங்களை கதை சொல்லும் சுருதியில் சேர்த்துக் கொள்கிறார். எதிர்பாராத முடிவுகள் அதீத நாடகப் பண்புடையதாக இருந்தாலும் தலைப்பிற்கேற்ப கதையின் விதியை இறைவன் தீர்மானிக்கிறான் என்பது கதாசிரியரின் கருத்து" என்ற கே எஸ் சிவகுமாரனின் பின்னட்டைக் குறிப்பு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரிமழை

- மு. சடாட்சரன் -



நீண்ட நாளாய் எதிர்பார்த்தது
பெய்கிறது மயண்டைக்குள் !
தகரக் கூரை திகைத்தறை
பாரமான துளிகளை
அள்ளிக் கொட்டுகிறது மாரிமழை !

கூதல் காற்று இதமாய் வருட
சேட்டை எடுத்துப் போடுகிறேன்.
பூச்சிகள் ஊடுருவித் தாக்கலாம் !

மேகக்குமுறலைக் கேட்டு
அதிரடி வானம் தொடர்ந்து பொழியும் !
மின் வெட்டு நீங்க யுத்தம் ஓயுமா ?
குடைகளால் மாரியை அடக்க முடியுமா ?
வட மேற்கு வானிலும்
கருமேகங்கள் கவிகின்றன.

வாசலால் வெள்ளம் வார்த்தோடிப் போகிறது !
மேட்டு மணலை இழுத்துச் சரிக்கிறது.
மயண்டைக்குள் பிடித்த மாரி மழை
பெரிதாய் மிகப் பெரிதாய் -
அருங்கோடை மாறி
கிணறுகுளங்கள் நிரம்பி
விளைநிலப் பயிர்கள் பூத்துக் காய்க்க
கொட்டு கொட்டெனக் கொட்டுகின்றது
இரவெல்லாம் மாரிமழை !
வெள்ளந்தான் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனி

# சமாதானப் பொறிக்குள் முஸ்லிம் காங்கிரஸ்

ஒரு அரசியலியல்

ஐக்கிய தேசிய முன்னனி அரசாங்கம் அமைத்து சுமார் 2 மாதங்கள் பூர்த்தியாகிக் கொண்டிருக்கும் நிலையில் அதன் பிரதான இலக்காக இப்போது வெளிக்காட்டப்படுவது சமாதானமாகவே அமைந்துள்ளது. எப்படியோ நிரந்தர யுத்தநிறுத்தம் ஒன்றுக்கு வழியமைத்து பின்பு பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானத்தையும் எட்டிப் பிடித்துவிடவேண்டும் என்றே பிரதமர் பாராளுமன்றத்திலும் வெளியிலும் வலியுறுத்தி வருகிறார். அரசாங்கத் தரப்பு ஒரு புறமிருக்க புலிகள் தரப்பும் தாங்களும் சமாதானத் தீர்வில் அக்கறையுள்ளவர்கள் போல இதற்கு முன்னர் றனசிங்க பிரேமதாஸா, பொதுஜன ஐக்கிய முன்னணிக் காலங்களில் காட்டியதனை விட இப்போது சற்று அதிகமான ஆர்வத்தை காண்பிப்பது போல் தெரிகின்றது. இதனால் எல்லோர் முகங்களிலும் சமாதான எதிர்பபார்ப்பும் நம்பிக்கையும் துளிர்விடத் தொடங்கியிருக்கிறது.

இந்நிலையில் நிரந்தர யுத்தநிறுத்த மேற்பட்டு சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்று ஆரம்பிக்கப்படுமாயின் ஐ தே மு அரசின் பங்காளியாக அமர்ந்திருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுக்கான தீர்வாக எதனை முன்வைக்கப் போகின்றது என்பது முஸ்லிம் சமூகத்திற்கு முன்னால் மிகப் பெரும் கேள்விக் குறியாக எழுந்துள்ளது.

காலம் சென்ற மு. கா. தலைவர் அஷ்ரப்.். பின் காலத்தில், ஆரம்ப காலங்களின் "நிலத்தொடர்பற்ற முஸ்லிம் அதிகார அலகு" என்றதொரு கருத்து அடிக்கடி பேசப்பட்டதுண்டு. பின்பு காலப்போக்கில் அது கைவிடப்பட்டு தென்கிழக்கு அதிகார அலகாகச் சுருங்கியது பலருக்கும் நினைவிருக்கலாம். இவ்வாறு சுருங்கிய போது மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி, யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் தங்களை முஸ்லிம் காங்கிரஸ் கைவிட்டு விட்டது என்று எதிர்ப்புக் குரல் எழுப்பினர். அது அவ்வேளை அஷ்ரப் அவர்களுக்கு பெரும் தலையிடியாகவே மாறியது.

இப்போது அரசாங்கமும் புலிகளும் பேச்சுவார்த்தை மேசையை நெருங்கி வந்து கொண்டிருக்கும் நிலையில் அமைச்சர் றஊப் ஹக்கீம் அவர்கள் முஸ்லிம்கள் தொடர்பாக வலியுறுத்த விருக்கும் கருத்துக்கள் எவையெனத் தெரியவில்லை. அரசுக்கும் புலிகளுக் மிடையே இடம் பெறும் சமாதானத் தீர்வு சம்மந்தமான பேச்சுவார்த்தையில் மூன்றாம் சக்தியாக முஸ்லிம்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவேண்டும் என றஊப் ஹக்கீம் அண்மையில் சமாதான ஏற்பாட்டாளர்களாக இருக்கும் நோர்வே குழுவிடமும் வலியுறுத்தியிருந்தார். ஆனால் தமது பிரச்சினைகளுக்குரிய தீர்வாக முஸ்லிம்கள் முன்வைக்க இருக்கும் கோரிக்கைகள் எவை என்பதை இதுவரை மு கா தலைவரோ அல்லது வேறு எவருமோ பகிரங்கமாக அல்லது வெளிப்படையாக எங்கும் தெரிவித்ததாக அறிய முடியவில்லை.

இணைந்த வடக்கு - கிழக்கு சுயாட்சி அலகுக்குள் அம்பாரை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களோடு மட்டக்களப்பு, வன்னி, திருகோணமலை, யாழ்ப்பாண முஸ்லிம் பிரதேசங்களை உள்ளடக்கியதான நிலத் தொடர்பற்ற மானிலத்தைக் கோருவதா அல்லது மற்றப் பிரதேசங்களை எல்லாம் கைவிட்டு விட்டு தென்கிழக்கு அதிகார அலகை மட்டும் கோருகின்ற ஏற்பாட்டில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் உள்ளார்களா அல்லது வேறு ஏதாவது கருத்துக்கள் அவர்களிடம் உள்ளதா என்று எதுவும் தெளிவாகத் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாக முன்னர் முஸ்லிம் மக்களின் சார்பாக முன்வைக்கப்படவிருக்கும் கோரிக்கைகள் எவை என்பது பகிரங்கப்படுத்தப் படவேண்டும். இப்போது அது சம்பந்தமா பேச வேண்டியதில்லையே, பேச்சுவார்த்தை மேசையில் அதனைப் பார்த்துக் கொள்ளலாம், என முஸ்லிம் தலைவர்கள் கருதுவார்களாயின்; அது அவர்களின் அரசியல் வங்குரோத்துத் தனமேயன்றி வேறில்லை.

வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்களுக் கென்று தனியான பிரச்சினைகள் உள்ளன. ஏனைய பிரதேசங்களில் முஸ்லிம்களைப் போலன்றி யுத்தத்தின் கோரப்பற்களுக்குள் சிக்கியவர்கள் அவர்கள். அதன் பக்கவிளைவுகள், சோகங்கள் என்பவற்றை தொடர்ந்தும் அனுபவித்து வருபவர்கள். எனவே, அவர்கள் சார்பாக என்ன கருத்துக்கள் வலியுறுத்தப்படவிருக்கின்றன என்பது அவர்களுக்குத் தெரிந்தேயாக வேண்டும்.

தென்கிழக்கு அதிகார அலகுதான் கோரிக்கை என்றால் அதற்குள் உள்ளடங்கவிருப்பது எப்பிரதேசங்கள்? அப்பிரதேசங்களுக்கு வெளியே வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற முஸ்லிம்களின் நிலைப்பாடு என்ன? கேள்விக்குறியாகவே விட்டு விடுவதா? அல்லது அவர்கள் தொடர்பாகவும் ஏதாவது கோரிக்கைகளை முன்வைப்பதா? தென்கிழக்கு அதிகார அலகு இல்லை என்றால் நிலத் தொடர்பற்ற மாநிலமா? அது சாத்தியப்படும் கோரிக்கையா? அதனை தர்க்க ரீதியாக நாம் எவ்வாறு முன் வைக்கப் போகிறோம்?. என்பன குறித்தெல்லாம் மிகவும் தீர்க்கமாக நாம் யோசித்து முடிவெடுத்துக் கொள்ள வேண்டும். நிலத் தொடர்பற்ற மாநிலம், தென்கிழக்கு அதிகார அலகு இவ்விரண்டுமே இல்லாமல் அரசியல் யாப்பு ரீதியாக உத்தரவாதப் படுத்தப்பட்ட உரிமைகளைக் கோருவது சாத்தியப்படுமா அவ்வாறானால் அதன் விளைவுகள் என்ன என்பது குறித்தும் நாம் சிந்திக்க வேண்டும்.

தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தெளிவுடன் இருக்கிறார்கள் அவர்கள் பேச்சு வார்த்தையில் எதனைக் கோருவார்கள் என்பது நாட்டுக்கே தெரியும் ஆனால் எமது நிலைதான் மூடுமந்திரமாக உள்ளது.

எனவே முஸ்லிம் தலைவர்கள், கல்வி மான்களுக்கு முன்னாள் உள்ள மிகவும் முக்கியமான கடமைகள் இவைதான்,

01. முஸ்லிம்களின் மீள்குடியேற்றம், அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது சம்மந்தமான தெளிவான முடிவுகளுக்கு வரலும், அவற்றைச் செயற்படுத்துவதற்கான கிரமமான வேலைத் திட்டத்தை வகுத்துக் கொள்ளலும்.

02. சமாதானத் தீர்வு பேச்சுவார்த்தையில் வலியுறுத்தப் படவிருக்கும் கருத்துக்கள் எவை? எவற்றை விட்டுக் கொடுக்கலாம், எவற்றை விட்டுக் கொடுக்க முடியாது என்பன பற்றி தீர்க்கமான முடிவுகளை எடுத்தல்

இவ்விரண்டையும் மேற்கொள்வதற்காக அறிஞர்கள், புத்திஜீவிகளை அழைத்து கருத்துக்கள் கேட்கப்படல் அவசியமாகும். கடந்த காலத் தவறுகளை மீண்டும் இழைக்காமலிருப்பதற்கு இதுவே சிறந்த வழி. கடந்த காலங்களில் ஆரம்பத்தில் ஒரு கோரிக்கையை முன்வைப்பதும் பின்பு அது திடீரென கைவிடப்பட்டு 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை' மாதிரிச் சுருங்குவதும் அதன் பயனாக மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிப்பதும் அடிக்கடி நிகழ்ந்தன. இனியும் அவ்வாறான தவறுகளுக்கு இடமளிக்காமல் பரந்தளவில் முஸ்லிம் புத்திஜீவிகளுடனும் அவ்வப் பிரதேச மக்களுடனும் விரிவான கலந்துரையாடல்களை நடாத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபிரிக்காவை உறுஞ்சிய முட்டைப் பூச்சி

- எஸ். எம். அய்யூப் -

உலக வரலாறுகளில் பெரும்பாலானவை ஆக்கிரமிப்பின் வரலாறாகவே பதிவாகியுள்ளன.

ஒரு இனம் அடுத்த இனத்தை அடக்கப் பார்க்கிறது. ஒரு நாகரீகம் அடுத்த நாகரீகத்தைத் தின்று ஏப்பமிடப்பார்க்கிறது. ஒரு கலாசாரம் அடுத்த கலாசாரத்தை உறுஞ்சப் பார்க்கிறது. ஒரு தத்துவம் ,ஒரு கொள்கை அடுத்த தத்துவத்தை, கொள்கையைப் பிழையாக்கப் பார்க்கிறது.

இதனால் தான் ஆக்கிரமிப்பின் வரலாறுகள் போராட்டங்களின் வரலாறாக உலக உருண்டையில் ஒட்டப்பட்டிருக்கிறது. ஆலமரத்தின் ஆக்கிரமிப்பில் மறைந்து விடும் பனைமரம் மாதிரி ஆக்கிரமிக்கப்பட்ட அம்சம் உலகின் கண்களை விட்டும் கடந்து போவதுமுண்டு.

குஞ்சுகளால் உறுஞ்சப்பட்ட தாய்ச் சிலந்தி இறந்து கோதாகி விடுவது போல் ஆக்கிரமிக்கப்பட்ட அம்சம் இறந்து விடுவதுமுண்டு. சங்கிலிகள், விலங்குகள், போர்க்கருவிகள், அம்புகள், அம்பறாத் துணிகள், நவீன ஆயுதங்கள், சிம்மாசனங்கள் போன்றவற்றுக்கு உலகம் பிரயத்தனப்பட்ட அளவுக்கு வேறொன்றுக்கும் அது முண்டியடிக்கவில்லை. இவையெல்லாம் உலகை ஆக்கிரமிப்புக்குள் நகர்த்தும் உருளைகள்.

'ஆக்கிரமிப்பு' எனும் சிந்தனை மனதுக்குள் புகும் போது கூடவே ஒரு மிருகமும் சேர்ந்து செல்கிறது. அதே நேரம் மனிதம் எனும் உயிர் வெளியேறுகிறது.

நாடுகளை ஆக்கிரமிக்கும் காலனித்துவத்தில் மேலைத்தேய நாடுகள் ஈடுபட்ட போது நடத்திய போர்கள், செய்த கொலைகள், புரிந்த கற்பழிப்புக்கள் வரலாற்றின் பக்கங்களில் இன்னும் ஈரமாகவே உள்ளன.

'சாம்புரே' எனும் ஆபிரிக்கக் கவிஞர் எழுதிய 'ஒரு முட்டைப் பூச்சிக்கு' எனும் கவிதை காலனித்துவ வாதிகள் எப்படித் தம்மை ஆக்கிரமித்தார்கள் எப்படித் தம்மையும், தம் நாட்டையும் உறுஞ்சினார்கள் என்பதை விளக்கிறது.

இங்கு முட்டைப் பூச்சி என்பது யார் யாரெல்லாம் தம்மையும் தம் நாட்டையும் உறுஞ்சினார்களோ அவர்களுக்கான குறியீடு. முட்டைப் பூச்சியைப் போலவே பதுங்கி வந்து , ஒளிந்து வந்து அவர்களும் குத்தினார்கள்.

ஓ கொடூர ஜந்துவே
எத்தனைக் காலம்தான் இப்படி
என் குருதியைக் குடித்துக் கொண்டு
எனது இனிய கனவுகளினின்றும்
என்னைத் துண்டித்து
என் படுக்கையில் வாசம் செய்வாய் !




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உடம்பில் உனது
மதியம் காலை மாலை விருந்துக்காய்
வேண்டிய ரத்தம் நிறையவே உண்டு
உண்பது மட்டுமா
உனது வம்ச விருத்தியும்
எனது படுக்கையில் தானே !

இவர்கள் ஒன்றும் வானுலகத் தேவர்களல்ல ! வெறும் அற்பர்கள்தான். ஆனால் புத்திசாலிகள் நேரம் பார்த்து அவர்கள் வந்தார்கள். அதனால்தான் வெற்றி கொண்டார்கள். காலனித்துவ வாதிகள் எப்படி நம்மை ஆக்கிரமித்தார்கள் என்றால் ..... ஆக்கிரமிக்கப்படக் கூடிய நிலையில் நாம் இருந்தோம் என ஒரு அறிஞர் கூறியது இதனைத்தான். வேலி பலமாக இருந்தால் ஆடு எப்படி நுழையும் ?

அற்ப ஜீவனே நீ
அதி புத்திசாலி !
எனது ஆழ்ந்த உறக்கத்தில்
என்னை அணுகுவாய்
உனக்கு நிச்சயம் தெரியும்
உறக்கத்தின் ஆழத்தில்
உன்னைப் பிடிப்பது
ஆகாத காரியம்!



உங்களில் ஓர் ஒற்றை உயிரை
அந்திவியும் வரைக் கண்டதில்லை

இங்கு ஆச்சரியமான விடயம் என்னவெனில் நாம் ஆக்கிரமிக்கப் பட்டிருக்கிறோம் என்பது கூட விளங்காமல் இருப்பதுதான். நம் கைகளுக்கு பூட்டப்பட்ட விலங்குகள் கூட நமக்கு ஆபரணங்களாகவே விளங்கின. நம்மை இறுக்கிய கயிறுகளை காதலியின் இறுக்கம் என நினைத்து விட்டோம். அவர்கள் சிறையிலடைத்த போது கூட நாம் தாய்மடியாக அதனை நினைத்து விட்டோம். காலனித்துவ வாதிகள் சென்று விட்டார்கள். ஆனால் காலனித்துவம் வேறு முகங்களில் தொடர்கிறது. இது கூட எமக்கு விளங்குவதில்லை. இதைக் கவிதை சொல்கிறது.

இந்தப் படுக்கையில் உன் வாசம்
என் கனவில் நிகழ்ந்ததாகவே தோன்றும்.

கவிதையின் இறுதி வரி நெருப்பால் சுட்டு புறங்கையால் கன்னத்தில் அறைகிறது.

(15ம் பக்க தொடர்)

பொருத்தமான வேலைத்திட்டமொன்று முன் வைக்கப்பட்டாலொழிய ஒரு நல்ல தீர்வுக்கு வரமுடியாது. அதிகாரத்திலுள்ள மு காங்கிரஸே இதனைச் செய்ய வேண்டும். அதுதான் இதனைச் செய்யக் கூடிய சக்தியோடு தற்போது உள்ளது. அதன் மீதும் அதன் தலைவர் றஊப் ஹக்கீம் மீதும் மக்கள் அதிகமான எதிர்பார்ப்பை வைத்துள்ளனர். அவை வீண்போகாது பாதுகாப்பது அவரது தலையாய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாசமான தகவல்கள்

தமிழில் : யாஸீன் ஸாஹிப்

## உயிர்த்தெழுந்தாரா...? மயக்கத்திலிருந்து எழுந்தாரா...?

### யேசுநாதர்

யேசு நாதர் சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்ட பின் 03ம் நாள் உயிர்த்தெழுந்தார் என்று கிறிஸ்தவ மதத்தவரிடையே வேரூன்றிய ஒரு நம்பிக்கையிருப்பதை நாம் அறிவோம். ஆனால் பிரித்தானிய மருத்துவ சஞ்சிகை ஒன்றின் அறிக்கை எம்மை இப்படி அதிர வைக்கிறது:

யேசுநாதர் மயக்க நிலையில் இருந்து மீண்டும் நினைவு நிலைக்கு வந்தாரேயல்லாது மீண்டும் உயிர்த்தெழவில்லை என்பதே நம்பகரமான உண்மை என்பதாக கிறிஸ்துவத்தின் பிரதான நம்பிக்கைக் கோட்பாட்டை மறுத்துரைக்கும் அவ்வறிக்கை மேலும் தெரிவிப்பதாவது "சிலுவையில் அறையப்பட்ட யேசுநாதர் அதிர்ச்சியினாலும் இரத்த அழுத்தக் குறைவினாலும் மூளைக்கு இரத்தப் பற்றாக்குறை ஏற்பட உணர்வு மயக்க நிலையினை அடைந்தார். அவரின் வெளுறியிருந்த உடலும், அதன் அசைவற்ற தன்மையும் பார்த்தோர் அவர் இறந்து விட்டார் என நம்ப வைத்திருக்கும். சாட்டை அடியினால் பலவீனமடைந்த யேசுநாதர் ஆரம்பத்திலேயே மயக்க நிலை அடைந்தார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது"

இவ்வறிக்கையினை துணிகரமாக வெளியிட்டவர்கள் ஓய்வு பெற்ற மருத்துவ நிபுணர் Trevor Lloyd Davies (ட்ரெவர் லொயிட் டேவிஸ்) அவர்களும் அவரது பாரியாரான பிரபல மார்க்கவியல் விற்பன்னர் Margaret Davies (மார்க்ரெட் டேவிஸ்) அவர்களுமேயாவர்.

நன்றி The Island 1991.04.28

## "Knock out Punch"

# முஹம்மதலியின் (சொல்) இடி...!

முன்னாள் அதிபார குத்துச் சண்டை வீரர் முஹம்மதலி அவர்கள் நியூயோர்க் நகரத்தில் பயங்கர வாதிகளின் தாக்குதலால் அழிக்கப்பட்ட உலக வியாபார 'மையத்தை'ப் பார்க்கச் சென்றிருந்த சமயம் பத்திரிகை நிருபர் ஒருவர் கேலிகலந்த பாணியில் "இந்த அழிவைச் செய்த பயங்கரவாதிகள் உங்கள் மதமான இஸ்லாத்தைச் சேர்ந்தவராக இருப்பதை எவ்வாறு ஏற்றுக் கொள்கிறீர்கள்....?" என்று குத்தலாகக் கேட்டார்.

எப்போதும் போல் சொற்கணைக்குப் பஞ்சமில்லாத முஹம்மதலி அந்த நிருபருக்கு இப்படிப் பதிலடி கொடுத்தார். "ஹிட்லர் உங்கள் மதத்தைச் சேர்ந்தவராக இருப்பதை நீங்கள் எவ்வாறு சகித்துக் கொள்கிறீர்கள்....?"

நன்றி The Sunday Times 2001.10.28

* "எனக்கு அதிகமாகத் தேவைப்படுபவர் யார் என்றால், என்னால் இயன்றதைச்செய்யுமாறு தூண்டும் மனிதர்களே" - எமர்ஸன் -

* "இப்பொழுது சிறிய விடயங்களைச் செய்! நாளடைவில் பெரிய காரியங்கள் தங்களையும் செய்யுமாறு கேட்டுக்கொண்டு உன்னை வந்தடையும்" பாரசீகப் பழமொழி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சல் வெடிகுண்டு

- நவாஸ் சௌபி -

(கவிஞர் அன்புடீனின் முகங்களின் நயம்)

புதிய பறைவகள் கவிதா அணியின் முக்கிய கவிஞர்களுள் ஒருவரான கலைவானின் பரப்பெல்லாம் தன் கவிதைச் சிறகடித்த கவிஞர் அன்புடீன் அவர்களின் முகங்கள் கவிதை நூலில் நான் சிறகடித்தபோது "ஒரு தபாற்காரனின் ஏக்கம்" என்னையுமே ஏக்கப்படுத்தி, துக்கப்படுத்தி மீண்டும் மீண்டும் அதைப்படிக்க ஊக்கப்படுத்திது. சிறகில் சில இறகுகளை மட்டும் எடுத்து நயப்போம்.

முகவரியின் வாசலில் மணியெழுப்பும் தபாற்காரன் விலாசங்களுக்கு மடல்களை மட்டும் கொடுக்கவில்லை, எதிர்பார்ப்புக்காயங்களுக்கு ஒத்தடமும் கொடுக்கிறான், என்றென்றும் தபாற்காரனவன். ஆனால் ஒரு பெண்ணின் காதல் எதிர்பார்ப்புக்கு மட்டும் ஏமாற்றக் காயங்களைத் தானே கொடுத்துவிட்டதாக எண்ணிவருந்தி ஏக்கம் சுமக்கிறான்.

"என்றன் கைக்கிள்
எழுப்புகின்ற 'கிண்கிணி'யை
அண்டை அயலில்
ஆர்வமுடன் கேட்டவுடன்
உன்றன் வாசல்
கதவண்டை நீவருவாய்"

காதலித்துப்பார் தபாற்காரன் தெய்வமாவான் என்று வைரமுத்து சொன்னதை இவன் இப்போது உண்மைப் படுத்துகிறான். தூரத்துக் காதலனின் தூதுகளைக் காத்திருக்கும் காதலிக்கு தூதுவன் இந்தத் தபாற்காரன்தான்.

"கடிதம் வந்ததா ?
கணை தொடுக்கும் உன் விழிகள்
அத்தான் அனுப்பும்
அஞ்சலதைக் கண்டவுடன்
பித்தாகிப் பிடிப்பாயே
அச்சச்சா நீ சிரிப்பாய்
அதைப் பார்த்து
நான் மகிழ்வேன்"

அந்தக் காதலியின் கையில் கொடுத்த கடிதத்தின் எதிர்பார்ப்பின் இறுதியிலான மகிழ்ச்சியில்தான் எத்தனை இன்பம். காதலிப்பது மட்டுமல்ல, காதலுக்கு தூதுபோவதும் எவ்வளவு சுகமானது அவளின் சிரிப்பைக் கண்டு மகிழும் தபாற்காரனின் சிரிப்பின் அர்த்தம் இது. மணி ஒலிக்கும் ஜன்னலில் முகம் மலரும் அந்த காதல் றோஜா அன்றுமட்டுமேனோ முகம் காட்டவரவில்லை. அவள் விழிகளைத் தேடிய தபாற்காரனின் விழிகளில் அழுது வீங்கிய அவள்தாயின் முகமே சிக்கியது மனதைக் கிழித்தது சேதி, மங்கையவள் மரணித்து விட்டாளாம்.

"என்ன ? நான்
எடுத்து வந்த கடிதத்துள்
உள்ள செய்திகளா
உன்னுயிரைப் போக்கியது?"

இத்தனை நாளும் வார்த்தைகளில் வசந்தத்தை வைத்து கடிதத்தைக் கொடுத்த நானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷத்தை வைத்து மரணத்தைக் கொடுத்துவிட்டேன். தபார்காரன் தன்னையே சபிக்கிறான். தன்னைப் பாவி என்று சொல்லித் துடிக்கிறான். 'என்னை மறந்துவிடு' என்ற வார்த்தைகளில்தான் அந்தக் கொடுமைக் காரன் காதலன் விஷத்தை ஊற்றி அனுப்பிவைத்தானா உனக்கு ?

"என்றன் கடமை
எதுவென்று நீயறிவாய்
உன்றன் மரணம்
அஞ்சலிலா யாரறிந்தார் ?"

தன் வாழ்க்கையை அஞ்சலில் எதிர் பார்த்தவளுக்கு இறைவன் காதலின் வடிவில் மரணத்தை வைத்து அனுப்பி இருக்கிறான். இடையில் தபார்காரன் தன் கடமையைத்தானே செய்திருக்கிறான். இருந்தாலும் தன் கடமை கன்னி ஒருவளின் சாவுக்கா மணி அடித்திருக்கிறது என்றெண்ணி உலகத்தின் காதலுக்கே சாவுமணி அடிக்கப் புறப்படுகிறான்.

## போது



**போது** என்னும் பெயரில் மட்டக்களப்பு மண்ணிலிருந்து வெளிவரும் மறுமலர்ச்சி இதழின் 2001 டிசம்பர் இதழ் எமக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. சமூக எழுச்சியும் மறுமலர்ச்சியும் கருத்தான்றி இருக்கும் இவ்விதழ், கவிஞர் வாகரை வாணன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு டிசம்பர் இதழ் யேசு ராத்திரியை விவரிப்பதாய் உள்ளது.

யேசு பாலன் கவிதை, பைபிளின் கதை, சிறுவர் கதை என்பனவற்றோடு அறிய வேண்டிய அரிய மனிதர்கள் என்னும் தொடரில் இம்முறை தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாண சுந்தரனார் அவர்களைப் பற்றிய அரிய குறிப்புக்களுடனும், தொடரும் இழப்புக்கள் எனும் மணிக்கதை ஒன்றும் பாரதியின் கவிதையின் இயற்கை எனும் இலக்கிய ஆய்வுக் கட்டுரையும், போதைப் பொருள் பாவனை தொடர்பான கண்ணோட்டக் கட்டுரை மற்றும் பழமொழி ஒன்றுக்கு தமிழகப் பேச்சாளரின் பிழையான, மூடத்தனமான விளக்கமொன்றுக்கு வாகரை வாணன் அவர்களின் பதில் கட்டுரையும் இவ்விதழில் சிறப்புக்குரியவை. இடையிடையே சில அரசியல் வியூகக் குறிப்புக்களையும் காணக் கிடைக்கிறது. விலை - 10.00ரூபா, தொடர்புகளுக்கு: வாகரை வாணன், ஆரணியகம், 479/3, புதிய கல்முனை வீதி, நாவற்குடா, மட்டக்களப்பு.

## நூல்கள், சஞ்சிகைகள் வெளியீட்டாளர்களின் கவனத்திற்கு

தாங்களின் நூல்கள், சஞ்சிகைகள் பற்றிய விமர்சனக் குறிப்போ அல்லது அறிமுகக் குறிப்போ எமது கீறலில் இடம்பெற வேண்டுமென்று விரும்புபவர்கள், தாங்களின் நூல்கள் / சஞ்சிகைகளில் ஒரு பிரதியினை மாத்திரம் எங்களுக்கு அனுப்பி வைத்தால் போதுமானது. - ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய் நக்கிய பூ

- கலைப்பிறை வஹாப்தீன் -

மானத்தை இளந்தவளை
மண்ணைத் தோண்டி
அடக்கம் செய்யலாம்
செத்த நாயைப் புதைப்பது போல்

கட்டியவன் கடல் தாண்டி
காசழைக்கப் புறப்பட்டான்
புறாவாகி
கட்டிலுக்கு உறவு தேடி
கண்மணியோ புறப்பட்டாள்
காமப் பேயாகி

வானத்து நிலா
வேலி தாண்டி
சேற்று நீரில் விழுந்து
அழுக்குப் பூசி
அழிந்து புதைகிறது சப்பளிந்து

அற்ப சுகத்திற்காய்
ஆண்டவனையும் மறப்பதா?
சொற்பமான உலகம்
முடிந்த பின்
சொல்ல வேண்டும் இதற்கு விடை

அதற்கிடையில்
கட்டி இழுத்து வந்து
காறித் துப்புங்கள்
அவள்
கரைந்து போகட்டும்

நெஞ்சு கொதித்து
கலங்கும் அவள்
கணவனைக் கூப்பிட்டு
கழுத்தை வெட்டச் சொல்லுங்கள்
மூக்கைப் பொத்திக் கொண்டு



ஒரு சில நிமிட
ஒத்தாசையால்
வாழ்க்கை கிழிந்து போனது
பழைய புடவை மாதரி

அவள்
ஆடையணிந்திருந்த போதும்
நிர்வாணம் தான்
ஊருக்குள் பெரிய
நாற்றம் எடுக்கிறது
துரத்தி அடியுங்கள்
தூரப்பாங்கட்டால்

இது வாசம் நிறைந்த
புனிதப் பூஞ்சோலை
இங்கே
அதிகமான பத்தினிப் பூக்கள்
பூத்திருக்கின்றன

இந்த
நாற்றமெடுக்கும்
கெட்டுப் போன பூவைக் கசக்கி
எறியுங்கள் சீக்கிரம்
பத்தினிப் பூக்கள்
பத்தி எரியப் போகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர் உங்களிடம்

கீறல் முதல் இதழின் வெள்ளோட்ட முயற்சி உண்மையில் எதிர்பாராத அளவு வெற்றியினை எங்களுக்கு அளித்திருந்ததில் மிக்க மகிழ்ச்சி. கீறல் முதல் இதழ் ஒரு றமழான் விஷேட இதழாக அமையப் பெற்றிருந்தது நீங்கள் அறிந்ததே. இவ்விதழினை முடிந்தளவு ஒரு இலக்கிய இதழாகவே கொண்டு வர முனைந்திருக்கிறோம்.

தடைக்கற்களை படிக்கற்களாக்கும் போதுதான் வெற்றிப்படியை எட்டலாம் என்பதை கீறல் 02 ஐ வெளிக் கொணர்வதில் முழுதாக நாங்கள் அறிந்தோம். இளைய படைப் பாளிகளுக்கு பிரபலங்களின் படைப் பிலக்கியங்களை அறிமுகம் செய்து வைக்க கீறல் ஆசைப்பட்ட வேளை பிரபலங்கள் பலரை நாடியது எங்களது இம்முயற்சியின் பெறுமதியினைப் புரிந்து அவர்கள் அனைவரும் நேசக் கரம் நீட்டியது உண்மையில் எங்களை உற்சாகப் படுத்தியது.

பிரபலங்களுக்கு மட்டும்தானா கீறல் இடம் தரும் என்று யாரும் அவசரப்பட்டு வினாவெழுப்பி விடாதீர்கள். இளைய படைப்பாளிகளை ஊக்கப்படுத்தும் அதே வேளை மூத்த படைப் பாளிகளை யும் கௌரவப் படுத்தவும் கீறல் முனைகிறது.

படைப்பாளிகள் தனியே கவிதைத் துறையில் மாத்திரம் நின்று விடாமல் சிறுகதை, கட்டுரை, சிந்தனைக் கட்டுரை, ஆய்வுக் கட்டுரை, நூல் விமர்சனங்கள், மொழிமாற்றப் படைப் பிலக்கியங்கள் சர்வதேசத் தகவல்கள் என பல்வேறு முனைகளைக் கொண்டும் இங்கு கீறுங்கள்.

கடந்த இதழுக்கு நீங்கள் தந்த உற்சாகத்தினைக் கொண்டே உறுதியுடன் இவ்விதழினையும் எங்களால் கொண்டுவர முடிந்தது. எனவே தொடர்ச்சியாக உங்களது ஆக்கங்களையும் ஊக்கங்களையும் நீங்கள் அளிக்க வேண்டுமென்று வினயமாய் வேண்டி நிற்கிறது கீறல்.

அன்புடன் ஆசிரியர்





மின்னல் வெளியீட்டகக்
கலை இலக்கியக் குழு

காலாண்டிதழ்
ஜனவரி - மார்ச்
2002

பிரதம ஆசிரியர் :
அஸீஸ் எம். பாயிஸ்

உதவி ஆசிரியர்கள் :
ஐ. பி. எம். ஸாலிஹ்
எஸ். எம். எம். நஸீறுதீன்

ஓவியங்கள் :
எம். எம். எம். நகீபு
ஐ. எல். றிஸ்வி



தொடர்புகளுக்கு :

The editor,
**KEERAL**
Minnal publication
194, Weaving Centre Road
Oluvil - 2

Tel : 067 - 55157,
Fax: 067 - 55157.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனும் மரங்களும் ....!

- கிண்ணியா எம். ரி. சஜாத் -



மானிடன் பாரினில் பிறந்து விட்டான் - அவன்
மரத்திலும் மோசமாய் வளர்ந்து விட்டான் !
கானியைப் பூமியை அபக ரித்தே - பல
கேடுகள் செய்திடத் துவங்கி விட்டான் !

காய்கறித் தோட்டங்கள் செய்து வைத்து - சில
காசுகள் சேர்ப்பதை நிறுத்தி விட்டான் !
வாய்வசை பேசியே வம்ப ளந்து - தினம்
வாழ்வதே கொள்கையாய் வகுத்து விட்டான் !

காய்ப்பதால் கல்லெறி படுகி றதே - அந்தக்
காரியம் செய்வதும் நீ யல்லவா....
ஆயுதம் கொண்டிதை நீத றித்தால் - அவை
அழுதிடும்... அதையும் நீகேட் கலையா...?

காய்களும் கனிகளும் மலர்வ தையும் - எம்
கழனிகள் தந்திடும் அழகி னையும்
மனதினில் இதந்தரும் நிழலி னையும் - மரம்
மகிழ்வுடன் தருவதை ஏன்; ம றந்தான்

எழில்மிகு சூழலை வடிவ மைத்து - மரம்
எங்கிலும் வளர்த்திட நினைத்து விட்டால்
வளம்தரும் புதியதோர் சூழ லினைநாம் - இவ்
வையத்தில் இனிதெனப் படைத்தி டலாம் !

**விமர்சனக் கடிதங்கள்**

கீறல் - காயம் ௦௧, ௦௨ பற்றி உங்களின் ஆக்க பூர்வமான, நடுநிலையான விமர்சனங்களை தயவு செய்து எழுதுங்கள் காயம் ௦௩ல் அவைகளைக் கீறல் சேர்த்துக் கொள்ளும். உங்கள் நடுநிலையான விமர்சனங்களில் படைப்பாளிகள் திருப்தியுறும் அதே வேளை நமது கீறலை இன்னும் நாம் தரப்படுத்திக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பமும் ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டுத் தொலைதொடர்பு, பெக்ஸ், லேமிநேற்றிங் மற்றும் அன்றாட வீட்டுப் பாவனைப் பொருட்களை நியாய விலையில் பெற :

கலீல் ரேடர்ஸ் அன் ஆலா கொமியுனிகேசன்

(என். ரீ. நௌஷாத்)

பிரதான வீதி,

அட்டாளைச்சேனை.

தொ.பே. / பெக்ஸ் இல: 063-77241

செல்ரெல் இல: 0094-72-283843

கொம்பெக் எலெக்ரோனிக்ஸ்

TV and VCR Service

உங்களின் ரீவி. வீ சீ ஆர் போன்றவற்றின்

நம்பகரமான உறுதியான திருத்த வேலைகளுக்கு

Compac Electronics

124B, கபஉஜஹட டப்ஜப

மலஹலஹஇசரஷந்ரஇட - 14

உரிமையாளர்: எம்.எஸ்.ஏ. ஜி.'.ப்ரி

(அ.சேனை சென்றல் கொலேஜுக்கு அருகாமையில்)

தரமான, உறுதியான, நேர்த்தியான செங்கற்களை

உற்பத்தி செய்து ஒலுவிலில் சந்தைப் படுத்துகிறார்

எஸ், எம், சுபைதீன்

நெசவு நிலைய வீதி, ஒலுவில் - 02



Type Setting & Page Setup

**A.B.Ilmudeen** (I R Computer)

2/3 Common Road,

Akkaraipattu 02.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org